02.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 5 கோடி மரக்கன்றுகளை நட ரயில்வே துறை திட்டம்

பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பு இருப்புப் பாதைகளை ஒட்டி 5 கோடி மரக்கன்றுகளை நடுவதற்கு இந்திய ரயில்வே துறை திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதுடன், ரயில் பாதைகளை ஒட்டிய பகுதிகளை பசுமையானதாக மாற்ற முடியும் எனக் கருதப்படுகிறது.

சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை கையாளுவதற்காக பிரத்யேக பிரிவு ஒன்றை ரயில்வே துறை துவக்கியுள்ளது. சுற்றுச்சூழல் இயக்குநரகம் என்ற அந்தப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது: பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன் இருப்புப் பாதைகள் உள்பட நாடெங்கிலும் உள்ள ரயில்வே நிலங்களில் மரக்கன்றுகளை நடுவதற்கான மாபெரும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

வேம்பு, நாவல்பழம் போன்ற மரக்கன்றுகளை நடுவது குறித்து இறுதிக்கட்ட ஆலோசனை நடைபெற்று வருகிறது. அந்தந்தப் பகுதிகள் மற்றும் மண்டலங்கள் வாரியாக மரச்செடி வகைகள் மாறுபடும். அதேவேளையில், மரங்களின் கிளைகள் இருப்புப் பாதைகளில் குறுக்கிடாதபடி திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுவோம். இவை

தவிர்த்து, சுற்றுச்சூழலில் ஆர்வமுடைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் இப்பணியில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மரக்கன்றுகளை நடுவதால் சுற்றுச்சூழல் மேம்படுவதோடு, ரயில்வே நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் தடுக்கப்படும் என்றார் அவர்.

## ரூ. 8 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 8 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனை சனிக்கிழமை நடைபெற்றது.

கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 7 ஆயிரத்து 500 வாழைத்தார்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

இதில், கதலி கிலோ ரூ. 26, நேந்திரம் கிலோ ரூ. 30, தார் ஒன்றுக்கு பூவன் ரூ. 340, செவ்வாழை ரூ. 400, ரஸ்தாலி ரூ. 350, ரோபஸ்டா ரூ. 250, தேன்வாழை ரூ. 350, மொந்தன் ரூ. 225, பச்சைநாடன் ரூ. 180-க்கும் என ரூ. 8 லட்சத்துக்கு விற்பனையானது.

தொடர்ந்து நடைபெற்ற தேங்காய் ஏலத்தில் 8 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இவை ரூ. 5 முதல் ரூ. 9 வரைக்கும் என மொத்தம் ரூ. 65 ஆயிரத்திற்கு விற்பனையானது. இவைகளை திருப்பூர், காங்கயம், கோபி, முத்தூர் பகுதியில் வந்திருந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

## ரூ. 46 லட்சத்துக்கு விளைபொருள்கள் ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 46 லட்சத்து 71 ஆயிரத்துக்கு கொப்பரை, தேங்காய், நிலக்கடலைக்காய் ஏலம் நடைபெற்றது.

மொடக்குறிச்சி சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 84 ஆயிரத்து 387 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு

கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 56.30-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 54.55-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக ரூ. 54.35-க்கும், குறைந்த பட்சமாக ரூ. 42.25-க்கும் என மொத்தம் ரூ. 44 லட்சத்து 37 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, 6 ஆயிரத்து 99 கிலோ எடையுள்ள 15 ஆயிரத்து 925 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 16 ஆயிரத்து 950-க்கும், குறைந்தபட்சமாக டன் ரூ. 12 ஆயிரத்து 700-க்கும் என மொத்தம் 91 ஆயிரத்து 548-க்கு ஏலம் நடைபெற்றது.

80 மூட்டைகளில் 2 ஆயிரத்து 742 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காயை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக கிலோ ரூ. 55.69-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 48.19-க்கும் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 42 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

மொத்தம் ரூ. 46 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 51.52 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை 51.52 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 79 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 2,000 கன அடிவீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர்இருப்பு 18.78 டி.எம்.சி.யாக இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடைக்கு ஏற்ற குறுந்தானியம்

வெயில் காலத்தில் பயன்படுத்த வேண்டிய குறுந்தானியங்களில் கம்புக்கு முதலிடம் உண்டு கம்பு உடலின்உஷ்ணத்தைக் குறைத்து குளிர்ச்சியைத் தரும். கம்பில்'நாட்டுக்கம்பு', 'கம்பெனிக் கம்பு' என இரு வகைகள் உண்டு. நாட்டுக்கம்பு அளவில் சிறியது. இப்போது கம்பெனிக்கம்பு தான் பரவலாக கிடைக்கிறது. சிறுதானியங்களிலேயே கம்பில் தான் அதிக அளவு புரதம் உள்ளது. வேறு எந்த தானியத்திலும் இல்லாத அளவில் 5 சதவீதம் எண்ணெய் கம்பில் உள்ளது. இந்த எண்ணெய்யில் உள்ள கொழுப்பு உடலுக்கு நன்மை செய்யும் கொழுப்பாக உள்ளது. நொச்சி இலை சேர்த்து கம்பை எளிய முறையில் பாதுகாக்கலாம்.

## கொளுத்தும் வெயிலால் எகிறிய பழம் விற்பனை

ஈரோடு: வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளதால், பழங்களின் விற்பனை மிகவும் அதிகரித்துள்ளது.

ஈரோடு நேதாஜி மார்க்கெட் மொத்த பழ மண்டி ராமசந்திரன் கூறியதாவது: கடந்த பிப்., முதல் கடும் வெயில் வாட்டுகிறது. இதனால், ஜூஸ் தயாரிப்புக்கான பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. தவிர, தற்போது பள்ளி விடுமுறை காலமாக உள்ளதால், பிற பழங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளது. வெயில் மிகவும் அதிகரித்துள்ளதால், மாம்பழத்தின் வரத்து சற்று குறைவாக உள்ளது. தற்போது கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் இருந்து அதிகமாக வரத்தாகிறது. இன்னும் சில நாட்களில், ஆந்திரா, கர்நாடகத்தில் இருந்தும் வரத்து மிகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். நேற்றைய நிலையில், பப்பாளி கிலோ, 15 ரூபாய், முலாம்பழம் -20, அன்னாசி - 10, 15, 20 ரூபாய்,

செந்தூரம் மாம்பழம் -20, நாட்டு மாங்காய் மற்றும் பழம் - 15 முதல், 20 ரூபாய், சேலம் குண்டு - 120 ரூபாய், பங்கனப்பள்ளி - 50 முதல், 60, பெங்களூரா - 25 முதல், 30, இம்மாம்பசந்த் - 80 முதல், 120, மாதுளை - 80 முதல், 120, ஜூஸ் திராட்சை - 160, விதை இல்லாத திராட்சை - 75, காஷ்மீர் ஆப்பிள் - 160 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டும், இதே விலைதான் நீடித்தது. விலையில் பெரிய மாற்றம் இல்லை. வெயில் அதிகமாக உள்ளதால், ஜூஸ் போட தேவையான பழங்களையே அதிகமாக வாங்கி செல்கின்றனர். ஒரு நாளைக்கு, 20 டன் வரை பழங்கள் விற்பனையாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பண்ணை பசுமை காய்கறி கொள்முதலில் மந்தம் - மழை காலம் வந்தால் வேகம் பிடிக்கும்**

ஊட்டி: கோடையின் தாக்கம் அதிகரித்து வருவதால், பண்ணை பசுமை காய்கறி திட்ட காய்கறி கொள்முதலில் மந்தமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மாநில அரசின் சார்பில் துவக்கப்பட்ட பண்ணை பசுமை திட்டம், மலை மாவட்ட விவசாயிகள் மத்தியில், கடந்த சில மாதங்களாக பிரபலமடைந்து வருகிறது. இதில், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தோட்டங்களுக்கு சென்று, விவசாயிகள் அறுவடை செய்த மலை காய்கறிகள், நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன.

கொள்முதல் செய்யப்பட்ட காய்கறி, சென்னை மற்றும் கோவையில் நடந்து வரும் பண்ணை பசுமை காய்கறி விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த, 2014 முதல், இத்திட்டத்தின் மூலம், 8 லட்சத்து 44 ஆயிரம் கிலோ காய்கறி, கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு, 2.71 கோடி ரூபாய் ஆகும். இதை தொடர்ந்து, திட்டத்தை ஊக்குவிக்க, கூட்டுறவு சங்கத்தின் மூலம், மலை காய்கறி விவசாயிகளுக்கு, பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து, கடந்த ஆண்டுமுதல், காய்கறி கொள்முதல் அதிகரித்து வந்தது.

இதனால், நடப்பாண்டின், ஏப்., மாதம் வரையில், விவசாயிகளிடம் இருந்து, 2 லட்சம் கிலோ பண்ணை பசுமை காய்கறி திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.

கூட்டுறவு துறை அதிகாரிகள் கூறியதாவது:

பண்ணை பசுமை காய்கறி திட்டத்துக்கு, சிறு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு உள்ளது. அதிகாரிகள், தோட்டத்துக்கு சென்று, காய்கறியை கொள்முதல் செய்வதால், சிறு விவசாயிகளுக்கு வாகன கட்டணம்; வீண் அலைச்சல் ஆகியவை குறைக்கப்படுகிறது.

இதனால், இந்த திட்டத்துக்கு நாளுக்கு நாள் கிராக்கி கூடி வருகிறது. தற்போது, கோடையின் தாக்கம் அதிகரித்து வருவதால், கொள்முதல் மந்தமான நிலையில் உள்ளது. குறைவான அளவிலேயே கொள்முதல் நடக்கிறது. மழை காலம் வந்தால், நிலைமை சரியாக விடும். வரும் காலங்களில், சிறு விவசாயிகளின் நலன் கருதி, மாநில அரசு மானியத்துடன் பல்வேறு உதவிகளை அளித்தால், இத்திட்டம் மேலும் மேம்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தேயிலை தூள் ஏலம் 96 சதவீதம் விற்பனை

குன்னூர் n குன்னூரில் நடந்த தேயிலை தூள் ஏலத்தில், 96 சதவீதம் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில், விற்பனை எண், 17க்கான ஏலம் நடந்தது. இதில், 8 லட்சத்து, 44 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வைக்கப்பட்டது. 96 சதவீதம் தூள் விற்பனையானது. தேயிலை ஏலத்தில், 2 ரூபாய் விலையேற்றம் காணப்பட்டது. இதில்,'சிடிசி' ரகத்தில், உயர்ந்தபட்ச விலையாக, தேயிலை தூள் கிலோவுக்கு, 216 ரூபாய்; ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 241 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண், 18க்கான ஏலம் விரைவில் நடக்க உள்ளது. இதற்கு, 8 லட்சத்து 11 ஆயிரம் கிலோ தேயிலை தயாராக வைக்கப்பட்டுள்ளது.

## கோபால்பட்டியில் தக்காளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

கோபால்பட்டி: சாணார்பட்டி ஒன்றியம் கோபால்பட்டி மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோபால்பட்டியை சுற்றியுள்ள வி.எஸ்.கோட்டை, அஞ்சுகுழிப்பட்டி, கன்னியாபுரம், மணியக்காரன்பட்டி, வலசு, தலையாரிபட்டி, கோம்பைபட்டி, அய்யாபட்டி, சக்கிலியன்கொடை, மருநூத்து, மேட்டுப்பட்டி, புது ஆவினிபட்டி உள்ளிட்ட கிராமப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்துள்ளனர்.

கோடை துவங்கியதும் ஒரு மாத இடைவெளியில் இரண்டு போகங்களாக சாகுபடி செய்வது வழக்கம். இந்த ஆண்டு மழை இல்லாததால் இரண்டவதாக சாகுபடி செய்த பயிர்கள் வெப்பம் காரணமாக பாதிக்குமேல் கருகிவிட்டன.

தப்பி பிழைத்த செடிகளில் உள்ள காய்களும் வெம்பி உதிர்கின்றன. இதனால் தக்காளி வரத்து குறைந்துள்ளது. முதல் போகத்தில் பயிரிடப்பட்ட செடிகள் இன்னும் காய்த்துக் கொண்டிருப்பதால் ஓரளவு விளைச்சல் உள்ளது. இருப்பினும் மார்க்கெட்டை பொறுத்தவரை வரத்து குறைவு என்பதால் விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் ரூ.200 முதல் 300 வரை விற்பனையான 13 கிலோ பெட்டி இந்த வாரம் தக்காளியின் தரத்தை பொறுத்து ரூ.450 முதல் 550 வரை விற்பனையாகிறது. ஒரே வாரத்தில் ரூ.250 வரை விலை உயர்ந்துள்ளதால் இப்பகுதி தக்காளி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## ஒட்டன்சத்திரத்தில் காய்கறி விலை ஏறுமுகம்

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து குறைவால் தக்காளி, சின்ன வெங்காயம், பீன்ஸ் விலை அதிகரித்துள்ளது.

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு சுற்றி உள்ள பகுதிகளில் விளைவிக்கப்படும் தக்காளி, வெங்காயம், மலைப் பகுதியில் விளையும் பீன்ஸ் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த சில நாட்களாக,

இவற்றின் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் விலை குறைந்து காணப்பட்டது.

கடந்த ஒரு மாதமாக சுட்டெரிக்கும் வெயிலால் பிஞ்சுகள் உதிர்ந்து தக்காளி வரத்து சரிந்து விலை ஏற்றம் அடைந்தது. சென்ற வாரம் ஒரு கிலோ தக்காளி ரூ.10க்கு விற்றது. இந்த வாரம் கிலோ ரூ.21க்கு விற்றது.

இதே போல் கிலோ ரூ.25க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.32 க்கும்,பீன்ஸ் கிலோ ரூ.80க்கும் விற்றது.

மார்க்கெட்டில் வெயில் காரணமாக பல காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மஞ்சளாறு அணை நீர் பிடிப்பு பகுதியை ஆக்கிரமித்து நிலக்கடலை சாகுபடி

தேவதானப்பட்டி: மஞ்சளாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர்.

தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 57 அடியாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள தலையாறு, மூலாறு வரட்டாறு, மஞ்சளாறு ஆகிய பகுதியில் பெய்யும் மழைநீர் அணையில் தேங்குகிறது. இதன் மூலம் திண்டுக்கல்,தேனிம ாவட்டங்களில் 5 ஆயிரத்து 200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியைப் பெற்று முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

கடந்த சில மாதங்களாக அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லை.

இதனால் அணைக்கு நீர்வரத்து இல்லாததால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. தற்போது அணையில் 33 அடி நீர் உள்ளது. அணையில் இருந்து நீர் வெளியேற்றப்படவில்லை.

ஆக்கிரமிப்பு: அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நீர்மட்டம் குறைய, குறைய ஆக்கிரமிப்பாளர்கள் உழவுப் பணியை துவங்கி உள்ளனர். குறுகிய காலப் பயிர்களான மக்காச்சோளம், தட்டை பயறு மற்றும்

நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர். ஏற்கெனவே அணையின் <உள் பகுதியில் தென்னை, மா, இலவம் போன்ற நீண்ட கால மரங்களை வளர்த்துள்ளனர்.

சில இடங்களில் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. அடுத்து மழைக்காலம் துவங்கி அணைக்கு நீர்வரத்து வரும் வரை நீர்பிடிப்பு பகுதிகள் அனைத்தும் ஆக்கிரமிப்பாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

## தக்காளியை பாதுகாக்க குளிர்பதன கிடங்கு தேவை

பெ.நா.பாளையம்: கருமந்துறை, பாப்பநாய்க்கன்பட்டி, தும்பல் உள்ளிட்ட கிராமங்களில், அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்கின்றனர். அங்கு விளையும் தக்காளி, ஆத்தூர், தலைவாசல் பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு எடுத்துச்செல்கின்றனர். ஆனால், தக்காளிக்கு உரிய விலை கிடைப்பதில்லை. தக்காளி, மகசூல் குறையும் நேரத்தில் அதிக விலையும், அதிக விளைச்சல் உள்ள தருணத்தில் குறைந்த விலையும் கிடைப்பதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், பெத்தநாயக்கன்பாளையத்தை மையமாக கொண்டு, தக்காளியை பாதுகாக்க குளிர்பதன கிடங்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேங்காய் விலை ரூ.4; இளநீர் விலை ரூ.40

ப.வேலூர்: கோடை வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் வெப்பத்தை தணிக்க வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் பழச்சாறுகளை குடிக்க அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. இதனால் தர்பூசணி, நுங்கு, இளநீர் விற்பனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக இளநீர் விலை அதிகரிப்பால், அதை வாங்கி பருக நினைப்பவர்கள் தயக்கம் காட்டுகின்றன. ப.வேலூர் சுல்தான் பேட்டை உழவர் சந்தையில் ஒரு இளநீர், 12 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், சாலையோர வியாபாரிகள் மற்றும் பழச்சாறு கடைகளில் இளநீர், 40 ரூபாய் முதல்

விற்கப்படுகின்றன. இதனால், வெயிலில் இளநீர் குடிக்க வருபவர்கள் இளநீர் விலையை கேட்டு அதிர்ச்சி அடைகின்றனர். வரலாறு காணாத விலையில், தேங்காய் விலை, நான்கு ரூபாய் என சரிந்துள்ள நிலையில், இளநீர் மட்டும், 15 முதல், 40 ரூபாய் வரை விற்பது மக்களுக்கு வியப்பாக உள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தர்மபுரியில் வெங்காயம் விலை உயர்வு கிலோ ரூ.25க்கு விற்பனை

தர்மபுரி : தர்மபுரியில் வெங்காயம் விலை உயர்ந்துள்ளது. கிலோ ரூ.25க்கு விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் சோகத்தூர், அதகப்பாடி, இண்டூர், பாப்பாரப்பட்டி, அக்ரஹாரம், பென்னாகரம், நல்லம்பள்ளி மற்றும் பாலக்கோடு உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் 300 ஏக்கருக்கு மேல் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் வெங்காயம் இண்டூர், அதகப்பாடி அருகே உள்ள வெங்காய மண்டிகளில் பதப்படுத்தி உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

சின்ன வெங்காயம் விலை கடந்த ஒரு வாரம் வரை கிலோ ரூ.15க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று கடகத்தூர் மெயின் ரோடு பகுதிகளில் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் கிலோ ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரே வாரத்தில் கிலோவுக்கு 10 ரூபாய் விலை அதிகரித்துள்ளது. கடும் வெயில் காரணமாக வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில், வரத்தும் சற்று குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைப்பழம் விற்பனை**

கோபி,: கோபியில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற வாழை ஏலத்திற்கு கோபி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து விவசாயிகள், 7 ஆயிரத்து 500 வாழைப்பழத்தார்கள் கொண்டு வந்திருந்தனர்.

இதில் கதலி(கிலோ) ரூ.26, நேந்திரம் (கிலோ) ரூ.30, பூவன்(தார்) ரூ.340, செவ்வாழை ரூ.400, ரஸ்தாலி ரூ.350, ரோபஸ்டா ரூ.250, தேன்வாழை ரூ.350, மொந்தன் ரூ.225, பச்சைநாடன் ரூ.180 என மொத்தம் ரூ.8 லட்சத்திற்கு வாழைப்பழம் விற்பனையானது.அதே போன்று இங்கு நடைபெற்ற தேங்காய் ஏலத்திற்கு 8 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன. இவை ரூ.5 முதல் ரூ.9 வரைக்கும் என மொத்தம் ரூ.65 ஆயிரத்திற்கு விற்பனையானது.

**எலுமிச்சை விலை கிடுகிடு உயர்வு கிலோ ரூ.160க்கு விற்பனை**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டில் எலுமிச்சை வரத்து குறைவால், அதன் விலை ரூ.160 ஆக உயர்ந்துள்ளது. பொள்ளாச்சி மார்க்கெட்டுகளுக்கு ஒட்டன்சத்திரம், பழனி, திண்டுக்கல், நிலக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து எலுமிச்சை கொண்டு வரப்படுகிறது. தற்போது மழை இல்லாததால் பெரும்பாலான இடங்களில் எலுமிச்சை உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், கடந்த மாதம்முதல் மார்க்கெட்டுக்கு எலுமிச்சை வரத்து மிகவும் குறைந்து, அதன் விலை ஏற்றமடைந்தது. கடந்த மாத துவக்கத்தில் ஒரு கிலோ எலுமிச்சை ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனையானது.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் தேவை அதிகரித்து அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால், ஒரு கிலோ எலுமிச்சை ரூ.160 முதல் ரூ.175க்கு விற்கிறது. வரத்து குறைவாக இருப்பதால், வெயிலின் தாக்கம் முடியும் வரை விலை அதிகமாகவே இருக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பலாப்பழம் விற்பனை ஜோர்**

அரியலூர், :அரியலூரில் பலாப்பழம் விற்பனை தற்போது சூடுபிடித்து வருகிறது. தமிழகம் எங்கும் கோடைவெயில் சுட்டெரித்து வருகிறது. கோடைக்கால சீசனில் மாம்பழம், பனநுங்கு, தர்பூசணி, வெள்ளரிப்பழம் போன்ற பழங்கள் வரிசையில் முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. பலாப்பழம் மிகவும் சுவையுடைய பழமாகவும் கோடைக்காலத்திற்கு ஏற்றதாகவும் விளங்கி வருகிறது.

இந்த பழமானது பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. பலாப்பழத்தின் வேர்கள் பேதியை கட்டுப்படுத்துவதற்கும், இலைகள் புண்கள் மற்றும் கட்டி போன்ற தோல் வியாதிகளை குணமாக்கவும் பயன்படுகிறது. இதன் பழங்கள் இனிப்பானது மற்றும் குளிர்ச்சி தருபவையாக உள்ளது. மேலும் மலச்சிக்கல், வாதபித்த சீற்றம், வயிற்று புண்ணை ஆற்றக்கூடியதாகும். இப்படி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டதாக பலாப்பழம் விளங்குகிறது.

இந்நிலையில் அரியலூர் வாரச்சந்தையில் பல்வேறு இடங்களில் நேற்று பலாப்பழங்கள் குவிக்கப்பட்டு இருந்தது. அப்போது அரியலூரை சுற்றியுள்ள மக்கள் பலாப்பழம் மற்றும் காய்களை வாங்கிய வண்ணமுமாக இருந்தனர். இதுகுறித்து பலாப்பழ விற்பனையாளரிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவதுதிருச்சியில் இருந்து அரியலூரில் வாரச்சந்தைக்கு விற்பனைக்காக வந்துள்ளோம்.

வெளி மாநிலங்களில் கேரளாவிலும், தமிழகத்தில் பன்ருட்டி, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்து பலாப்பழங்கள் கொண்டு வரப்பட்டு அரியலூரில் விற்பனை செய்கிறோம். இதில் பழத்திற்கு ஏற்ற சைஸ் வாரியாக ரூ.100 முதல் 250 வரை விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்தாண்டை விட இந்த ஆண்டு நல்ல பழங்கள் வரத்து பெற்றுள்ளது. ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் அரியலூர் வாரச்சந்தைக்கு பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். பிற நாட்களில் மாவட்டம் வாரியாக தொடர்ந்து பல்வேறு இடங்களில் பழங்களை விற்பனை செய்கிறோம் என்றார்.

## கால்நடை ஆய்வாளர் பேரவை கூட்டம்

திருச்சி, : தமிழ்நாடு ஓய்வுபெற்ற கால்நடை ஆய்வாளர்கள் சங்கம் சார்பில் திருச்சியில் நேற்று நடைெபற்ற 12வது மாநிலப் பேரவை கூட்டத்தில் 75 வயது நிரம்பியோர் கவுரவிக்கப்பட்டனர். தமிழ்நாடு ஓய்வுபெற்ற கால்நடை ஆய்வாளர்கள் சங்க 12வது மாநிலப் பேரவைக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாநிலத் தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். இணைச் செயலாளர் ஸ்ரீதரன் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் கோதண்டராமன் ஆண்டறிக்கை வாசித்தார்.

தொடர்ந்து பொருளாளர் வேல்முருகன் வரவு- செலவு கணக்கு தாக்கல் செய்தார். இதில் கால்நடை ஆய்வாளர்களாகப் பணியாற்றி 75 வயதை கடந்தவர்கள் மற்றும் சாதனைகளுக்காக விருதுபெற்றவர்களை கவுரவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு தீர்மானங்களை துணைத் தலைவர் அருள்தாஸ் வாசித்தார். கூட்டத்தில் கவுரவத் தலைவர் தசரதன், கவுரவ ஆலோசகர்கள் ரத்தினகிரி, சின்னச்சாமி, துரைசாமி, ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முன்னதாக, இணைச் செயலாளர் மோகன்ராம் வரவேற்றார். முடிவில் துணைத் தலைவர் நாகப்பன் நன்றி கூறினார்.

## தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை குறைந்தது பிச்சிப்பூ ரூ1000க்கு விற்பனை

ஆரல்வாய்மொழி, : தோவாளை பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை குறைந்துள்ளது. பிச்சிப்பூ ரூ1000க்கு விற்பனை செய்யப்படுகிறது. குமரிமாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தோவாளை பூ மார்க்கெட்டுக்கு குமரிமாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் அண்டை மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்தும் பூக்கள் மொத்தமாக வருகின்றன. இங்கிருந்து கேரளா மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் தோவாளை பூமார்க்கெட்டில் பூக்கள் விலை கடந்த இருதினங்களாக ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் பூ மார்க்கெட் இறக்கத்துடன்

காணப்படும்.

நேற்று முன்தினம் ரூ. 1250க்கு விற்ற பிச்சிப்பூ நேற்று ரூ. 1000க்கும், ரூ1000க்கு விற்ற முல்லைப்பூ ரூ.800க்கு விற்பனையானது. இதுபோல் ரூ.90க்கு விற்ற அரளி ரூ.70க்கும், மதுரை அரளி ரூ.150ல் இருந்து 140க்கும், மஞ்சள்கேந்தி ரூ.70ல் இருந்து 60க்கும் விற்பனையானது.

ரூ.80க்கு விற்ற ஆறஞ்சுகேந்தி அதே விலையில் நீடித்தது. சம்மங்கி ரூ.150ல் இருந்து 100க்கும், ரூ. 600க்கு விற்ற கனகாம்பரம் அதே விலைக்கும் விற்பனையானது. பட்டன் ேராஸ் ரூ.170ல் இருந்து 140க்கும், பாக்கெட் ரோஸ் ரூ.40ல் இருந்து 30க்கும், ஸ்டெம்ப் ரோஸ் ரு.80ல் இருந்து 50க்கும் விற்பனையானது. மரிக்கொழுந்து ரூ.100ல் இருந்து 80க்கும், வாடாமல்லி 70ல் இருந்து 60க்கும் விற்பனையானது. கோயில் திருவிழா நேரங்களில் விலையில் சற்று ஏற்ற இறக்கம் காணப்படும். என தோவாளையை சேர்ந்த பூ வியாபாரி கிருஷ்ணன் கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஈரோட்டில், வரத்து அதிகரிப்பால் மல்லிகை பூ கிலோ ரூ.80–க்கு விற்பனை



ஈரோடு,

ஈரோட்டில், வரத்து அதிகரிப்பால் மல்லிலை பூ கிலோ ரூ.80–க்கு விற்பனையாகிறது.

<u>மல்லிகை பூ</u>

ஈரோடு பஸ் நிலையம் பகுதியில் 10–க்கும் மேற்பட்ட பூக்கடைகள் செயல்பட்டு வருகிறது. இந்த கடைகளுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், சத்தியமங்கலம் போன்ற இடங்களில் இருந்தும் திண்டுக்கல், நாமக்கல் போன்ற வெளி மாவட்டங்களில் இருந்தும் பூ விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

ஈரோடு மாநகர் பகுதியில் உள்ள சிறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இங்கு வந்துதான் பூக்களை வாங்கிச்செல்கின்றனர். வெயில் காலங்களில் மல்லிகை பூ அதிக அளவில் பூக்கும். தற்போது கோடை வெயில் கொளுத்தி வருவதால் மல்லிகை பூ வரத்து அதிக அளவில் உள்ளது. அதனால் மல்லிகை விலை குறைந்து தற்போது கிலோ ரூ.80–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ரூ.80–க்கு...

இதுகுறித்து ஈரோடு பஸ் நிலையம் அருகில் பூக்கடை வைத்திருக்கும் சாதிக்பாட்ஷா என்பவர் கூறியதாவது:–

நாமக்கல், அந்தியூர் ஆகிய பகுதியில் இருந்து மல்லிகை பூவும், சத்தியமங்கலத்தில் இருந்து சம்பங்கி பூவும், திண்டுக்கல்லில் இருந்து மருகு, கனகாம்பரம் பூவும், சேலத்தில் இருந்து அரளி, சம்பங்கி, முல்லை போன்ற பூக்களும் ஈரோட்டுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.1,200–க்கு விற்பனையானது. ஆனால் தற்போது மல்லிகை பூ வரத்து அதிக அளவில் உள்ளதால் இன்று (நேற்று) ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையானது. அடுத்த மாதம் மல்லிகை பூ விலை உயர வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

ஊட்டி ரோஸ்

ஈரோட்டில் நேற்று விற்பனையான மற்ற பூக்களின் விலை கிலோவில் வருமாறு:–

அரளி –ரூ.50. சம்பங்கி –ரூ.50. முல்லை –ரூ.160. கனகாம்பரம் –ரூ.160. சாதா ரோஸ் –ரூ.100. மருகு –ரூ.45.

ஊட்டி ரோஸ் மற்றும் சாதி மல்லி தற்போது ஈரோட்டுக்கு வரத்து இல்லை.

**சேந்தமங்கலம் பகுதியில் மா அறுவடை தீவிரம் கேரளா, மும்பைக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது**



சேந்தமங்கலம்,
சேந்தமங்கலம் பகுதியில் மா அறுவடை தொடங்கி தீவிரமாக நடந்து வருகிறது. இப்பகுதியில் விளையும் சுவை மிகுந்த மாம்பழங்கள் கேரளா மாநிலம் மற்றும் மும்பை மாநகருக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

<u>மா சாகுபடி</u>

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் பகுதியில் விளையும் மாம்பழங்கள் சுவை மிகுந்து காணப்படும். சேந்தமங்கலம் அருகே உள்ள சின்னபள்ளம்பாறை, பெரியபள்ளம்பாறை, வாழவந்திகோம்பை, காரவள்ளி, புளியாங்காடு, தாதங்கோம்பை, நடுக்கோம்பை மற்றும் எருமப்பட்டி அருகே பவித்திரம், வரகூர் போன்ற பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.
கடந்த ஆண்டு மா சீசனின்போது மழை பெய்ததால் விளைச்சல் அதிகமாகி, மா வியாபாரிகள் லாபம் அடைந்தனர். இந்த வருடம்

சீசனின்போது மழை குறைவால் தற்போதைய விளைச்சல் கடந்த ஆண்டை விட 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் மா வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

<u>அறுவடை தொடங்கியது</u>

இந்த பகுதியில் இமாம்பசந்த், அல்போன்சா, செந்தூரா, பங்கனபள்ளி, கல்லாமை, சேலம் பெங்களூரா, நடுசாலை போன்ற பல்வேறு வகையான மாம்பழங்கள் கிடைக்கின்றன. அதில் இமாம்பசந்த், அல்போன்சா போன்ற ரகங்கள் சுவை மிகுந்து காணப்படுவதால் வெளி மாநிலங்களான கேரளா மற்றும் மராட்டிய மாநிலத்தில் உள்ள மும்பை மாநகருக்கும் அதிக அளவில் விற்பனைக்காக இந்த பகுதியில் இருந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மாம்பழம் அறுவடை சீசன் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் தொடங்கி ஜூன் மாதம் இறுதி வரை நடக்கும். தற்போது இந்த ஆண்டு தாமதமாக ஏப்ரல் மாத இறுதியில் அறுவடை தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு 50–க்கும் மேற்பட்ட சிறு லாரிகளில் மாம்பழங்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். ஆனால் இந்த ஆண்டு குறைவான வாகனங்களிலேயே கொண்டு செல்லப்படுகிறது. மா விளைச்சல் நன்றாக இருக்கக்கூடிய ஆண்டுகளில் விவசாயிகள் முழுமையாக பயன் அடைய சேந்தமங்கலம் பகுதிகளில் மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என மா விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.